IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.170/2010
DEPOSITION OF WITNESS

<u>பி.வா.சா. 2 சாட்சி செந்தில்குமார் த.பெ.கொண்டயசாமி நாயுடு</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 17.02.2026 in accordance with the provisions of Act XX141.**

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. வழக்கின் சொத்து விபரம் தெரியும் என்றால் சரிதான். சொத்துக்கள் அனைத்தும் இராமசாமி நாயுடுவின் பூர்வீக சொத்து என்றால் சரிதான். இராமசாமி நாயுடு என்பவர் யாருக்கும் எந்தவித பத்திரமும் எழுதிகொடுக்கவில்லை என்றால் சரிதான். இராமசாமி நாயுடு எந்த வருடம் இறந்தார் என்றால் தெரியாது. இராமசாமி நாயுடுவின் மனைவி ஞானம்மாளை பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. இராமசாமி நாயுடுவின் மனைவி ஞானம்மாள் இறந்து 10 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். அவர் இறப்பதற்கு முன்பு எத்தனை நாட்கள் வரை படுத்தப்படுக்கையாக இருந்தார் என்றால் இல்லை, நன்றாக நடமாட்டத்துடன்தான் இருந்தார்கள்.

2. இராமசாமி நாயுடுவின் சொத்துக்கள் பாகம் பிரித்ததற்கு ஆவணம் எதுவும் பார்த்தேனா என்றால் பார்த்ததில்லை. ஞானம்மாள் என்பவரின் தகப்பனார் மற்றும் தாய் பெயர் என்ன என்றால் தெரியாது. ஞானம்மாள் என்பவர் தனது சொத்துக்களை யாருக்கு எழுதிகொடுத்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஞானம்மாளுக்கு என்னென்ன சொத்துக்கள் இருந்தது என்றால் 11 சொத்துக்கள் பாத்தியப்பட்டு இருந்தது. மேற்படி சொத்துக்களின் பத்திரத்தை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. சுரேஷ்

பத்திரத்தை எங்களிடம் காண்பித்தாரா என்றால் என்னிடம் காண்பிக்கவில்லை. 11 இலக்க சொத்திற்கு பட்டா, வீட்டுவரி இரசீது எதுவும் பார்த்தேனா என்றால் எதுவும் பார்க்கவில்லை.

3. 3ம் பிரதிவாதி சுரேஷ் என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் சின்னம்மா மகன் ஆவார். ஞானம்மாளின் தங்க நகை சுரேஷ்யிடம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுப்பம்மாள் பெயரில் உள்ள சொத்து பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. சுப்பம்மாள் பெயரில் பட்டாவும் இல்லை. வாதி சுப்பம்மாள் நிலத்தை 10 வருடங்களாக ஒத்தியாக அனுபவம் செய்து வந்ததற்கு எதாவது ஆவணம் கைவசம் உள்ளதா என்றால் இல்லை.

4. மேற்படி ஒத்திக்கு எந்தவிதமான எழுத்துக்களும் இல்லை என்றால் சரிதான். ஒத்தி பணம் ரூ.3000/– நான் எந்த சாட்சியின் முன்னிலையிலும் வைத்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஒத்தியாக சுப்பம்மாள் நிலத்தை அனுபவித்து வந்தேன் என்பது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. லெட்சுமி, நாகம்மாள், சுரேஷ் பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை வில்லங்கம் செய்ய முற்பட்டதால் வாதி சுப்பம்மாள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

5. மேற்படி வழக்கை வாதி ஏன் தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை வாக்கரலாக பாகம் செய்துக்கொண்டார்களா என்றால் இல்லை. மேற்படி வாக்கரலாக பாகம் செய்துக்கொண்டது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

6. வாதி கேட்டுக்கொண்ட பரிகாரம் கிடைக்தக்கது அல்ல என்றாலும் நான் பிரதிவாதிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சுரேஷ் என்பவர் அழைத்ததன் பேரில்தான் நான் சாட்சி

சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் எழுதிகொடுத்தது யார் என்றால் நான் எந்தவொரு நிரூபண வாக்குமூலம் எழுதி கொடுக்கவில்லை.

**<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.17 11:14:54 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.